# இலத்திரனியல் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு

## The Women's Role in Electronic Media

M.J.F. Sana Anjum[1], M.M.F. Aqeela[2] & M.Y. Minnathul Suheera [3]

[1,2] Department of Arabic Language, Faculty of Islamic Studies & Arabic Language, SEUSL
[3] Lecturer in Social Sciences, Interdisiplinary Unit, Faculty of Islamic Studies & Arabic Language, SEUSL
fathimasanaanjum@gmail.com, Fathiakeela14@gmail.com,suheesafeek@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இருபத்தோராம் நூற்றாண்டில் விழிப்புடன் இயங்கும் கருவியாக ஊடகங்கள் அமைந்துள்ளன. இவ்வூடகங்களில் பெண்களின் பங்களிப்புக்களானது வரலாற்றுரீதியாக ஆரம்பகாலங்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டு வந்தாலும், இருபத்தோராம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பெண்ணிய எழுச்சிப் போராட்டங்களானது, ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்துள்ளன. இதன் விளைவாக, இத்துறையில் பெண்கள் பல்வேறுதளங்களில் பங்காற்றி வருகின்றனர். மேலும் தற்கால ஊடகங்களின் வெற்றியில் பெண்கள் பாரிய பங்களிப்பையும் செலுத்தி வருகின்றனர். இருந்த போதிலும், இத்தகைய பங்களிப்புக்களை ஆண்களின் பங்களிப்புக்களுடன் ஒப்பிடுகின்றபோது, அவை குறிப்பிடத்தக்க அடைவினை அடையவில்லை என்பதனை ஆய்வுகள் அடையாளப்படுத்துகின்றன. இவ்வகையில் இலங்கையிலும் பெண்கள் ஊடகத்துறையில் பங்பகளிப்புக்களைச் செலுத்தி வருகின்றனர். இருப்பினும் அத்தகைய பங்களிப்புக்கள் திருப்தியடைகின்ற மட்டத்தில் அமையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை இத்துறைகளில் பணியாற்றுகின்ற பல பெண்கள் திறமையாளர்களாகப் பல துறைகளில் தங்களை அடையாளப்படுத்தி வருகின்றனர். இருப்பினும் ஏனைய பெண்கள் இத்தகைய இடத்தைப் பெறுவதற்கான தகுதிகளைக் கொண்டவர்களாக இருப்பினும், அவர்கள் அத்தகைய அடைவுகளைப் பெறவில்லை. எனவே இவ்வாய்வானது பெண்களின் ஊடகத்துறைப் பங்களிப்பு குறைவாக இருப்பதற்கான காரணங்களை கண்டறிய முனைகின்றது. இவ்வாய்வை மேற்கொள்ள ஆய்வு முறையியலாக பண்புநிலைசார் ஆய்வைப் பயன்படுத்தியுள்ளது. இவ்வாய்வு நோக்கத்தை அடைந்துகொள்ள இலங்கையில் தமிழ் மொழியில் சேவை வழங்குகின்ற ஊடகத்துறைகளில் உள்ள பெண்கள் ஆய்வுச் சனத்தொகையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆய்வு மாதிரியாக தமிழ் ஒலிபரப்புச் சேவையில் பணியாற்றுகின்ற பெண்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுளள்ளனர். இவ்வாய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆழமான கலந்தரையாடல் நுட்பம் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவாக இலத்திரனியல் ஊடகத்துறையில் பெண்களின் அடைவுகள் குறைந்தமட்டத்தில் காணப்படுவதில் ஆணாதிக்க கருத்தியல்கள், குடும்பம், மற்றும் பெண் தொடர்பான சமூகப் பார்வைகள் ஆகிய காரணங்கள் பிரதானமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே பெண்கள் ஊடகத்துறையில் அடைவுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடைமுறைச் சாத்தியக் கொள்கைகளை உருவாக்கவேண்டும் என்பதனை இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**திறவுச் சொற்கள்: இலத்திரனியல் ஊடகம், பெண்களின் பங்காற்றல்**

## ஆய்வு அறிமுகம் (Introduction)

ஊடகங்களில் ஆண்களினதும், பெண்களினதும் பங்களிப்புக்கள் தொடர்பான வரலாறுகளில் 1970 களுக்கு முன்னர் வரை அச்சு ஊடகங்களில் பத்தரிகை, சஞ்சிகைகள் ஆகியனவற்றில் ஆண்கள் பெண்களை தவிர்த்து சேவைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.**இருப்பினும் 1970 களின்**

**பின்னர் தொலைக்காட்சி ஊடகங்களில் பெரும் சமூக தடைகளுக்கு மத்தியில் பெண்கள் பங்களிக்கத் தொடங்கியுள்ளனர் (ஸன்பிரங்இ 2014). இருப்பினும் இத்தகைய பெண்கள் சமூகத்தில் ஆண் அதிகாரத்திற்கு மதிப்பளிக்காதவர்கள், மனைவி, தாய் ஆகிய பாத்திரங்களிலிருந்து விலகிய பெண்களாகவும், ஆக்ரோசமான ஆண்களை எதிர்த்து நடக்கின்ற பெண்களாகவும் வகைப்படுத்திக் காடட்ப்பட்டுள்ளனர். இத்தகைய தடைகள் பெண்களை ஊடகங்களில் பங்களிப்புச் செய்வதிலிருந்தும் தடுத்து வந்ததாக எபிஸ்டைன் (1978) குறிப்பிட்டுக் காட்டுகின்றார். இருந்தபோதிலும் பெண்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்க அடைவினை அடையவில்லை. இருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகெங்கிலுமுள்ள பெண்கள் தமது சமத்துவத்தும், மற்றும் சமூக நிறுவனங்களில் தங்களுக்கான அனுமதிகளை விரிவுபடுத்துவதற்காகவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மேற்கொண்ட முயற்சிகளால் சட்டரீதியான , மற்றம் சமத்துவமான உரிமைகளைப் பெண்களுக்கு வழங்கியது. இவ்வகையில் ஊடகங்களில் பெண்களுக்கான சந்தர்ப்பங்களைப் பெறுவதில் காணப்பட்ட தடைகள் நீக்கப்பட்டன. இதனால் பெண்கள் ஊடகங்களில் பங்களிப்புச் செய்வது அதிகரித்தது. அத்துடன், தமக்கான ஊடகங்களை உருவாக்கி அவற்றில் செயலாற்றுவதில் முன்னேற்றம் கண்டனர். உதாரணமாக அமெரிக்காவின் 'செல்வி பத்திரிகையில் பெண்களின் ஊடகமரபு எடுத்துச் செல்லப்பட்டது. அதே போல இந்தியாவில் 'மனுஷி', 'பெண்ணிய இதழ்' ஆகியன ஊடகங்களில் ஆசியப் பிராந்தியங்களில் பெண்கள் ஊடகங்களில் பங்காற்றுவதற்கான வழிகளை அமைத்துக் கொடுத்தது ((ஸன்பிரங்இ 2014).**

**இருந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவான இலத்திரனியல் ஊடகங்களில் பெண்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள்அதிகளவில் வழங்கப்படவில்லை (ஸன்பிரங்இ 2014). இத்தகைய ஊடகங்களில் பெண்களுக்கான செய்தி அறைகளிலும், வானொலி, தொலைக்காட்சித் தயாரிப்புக்களிலும் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இருப்பினும் பல்வேறு போராட்டங்களை பெண்ணிய இயக்கங்கள் முன்னெடுத்து பெண்களுக்கான இடத்தை இலத்திரனியல் ஊடகங்களில் பெற்றுக் கொடுத்துள்ளது.**

இந்தளவில் ஊடகங்களின் வளர்ச்சி ஒருபுறமிருக்க, பெண்களின் கல்வி அடைவுகள் இவர்கள் ஊடகங்களில் பங்களிப்பதற்கான தளத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன (குளோபல் தமிழ் நியூஸ், 2018). அதில் பங்களிப்பு செய்யும் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனையும் அடையாளம் காணமுடிகின்றது. இருப்பினும் சர்வதேச ரீதியில் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவில் இருப்பதை குறிப்பிட முடியும். உதாரணமாக பீபிஸி, அல்- ஜெஸீறா போன்ற இலத்திரனியல் ஊடகங்களில் இத்தகைய பெண்களின் பங்களிப்புக்கள் அதிகளவில் காணப்படுவதனை அடையாளப்படுத்த முடியும். (குளோபல் தமிழ் நியூஸ்இ 2018). அதேபோல, இந்தியாவிலும் ஊடகத்துறையில் பல்வேறு துறைகளில் பெண்களின் பங்களிப்புக்களை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக அதன் வரலாற்று வளர்ச்சியை அவதானிக்கின்றபோது, பெண்கள் சினிமாத்துறையில் நடிகைகள் என்ற வரையறைக்குள் மாத்திரம் இருந்த நிலமைகள் மாறி, பெண்கள் இயக்குனர்இ

படப்பிடிப்பாளர்இ தயாரிப்பாளர் என பல துறைகளில் பங்களிப்புச் செலுத்தி வருகின்றனர். இத்தகைய பங்களிப்புக்கள், அச்சமூகத்தில் நிலவுகின்ற ஆணாதிக்க நிலமைகளை உடைத்து ஏற்பட்டதாகவும், இத்தகைய பெண்களின் பங்களிப்பக்களில் பெண்கள் பல்வகையான பேராட்டங்களை, குறிப்பாக குடும்பத்தின் தடைகள், திருமணத் தடைகள், நிர்வாகத் தடைகள் என பல தடைகளை எதிர்கொண்டு வெற்றிகண்டுள்ளனர் (ஹிந்துஇ 2017). குறிப்பாக, இலத்திரனியல் ஊடகங்கள் இன்றும் ஆண் ஆதிக்கத்திற்குட்பட்டு இயங்குவதனாலும், ஆண்களின் கட்டளை இடுகின்ற கலாசாரத்தில் அமைந்துள்ளமையாலும் , பெண்கள் ''குடும்பப் பொறுப்பிற்கானவர்கள்'' என்று எண்ணுகின்ற போக்குகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதனாலும் இத்துறைகளில் பாரியளவில் பங்களிப்பதில் தடைகளை ஏற்படுத்துகின்றன(ஜோயா சொக்ராபொடி, ஹஸாரிகா.எம். , அருனிமாகொஸ்வமி, 2015)இ இத்தகைய சாதனைகளில் ஆண் பெண் பாகுபாடு என்பனவற்றிற்கு அப்பால், பெண்களின் திறமைஇ பொறுமைஇ விடா முயற்சி ஆகியவை காரணமாயுள்ளன என சுதா (2017) குறிப்பிடுகின்றார். மேலும் அவர் ''திரைப்பட துறையில் இயக்குனராக நீடித்து நிலைக்க ஆண் பெண் என்பதெல்லாம் ஒரு தகுதி கிடையாது ஒருவரது தனிப்பட்ட திறன் மட்டுமே அதை முடிவு செய்கிறது. பெண் என்பதால் சமூகத்தில் அங்கீகாரம் மறுக்கப்படுகிறது இருப்பினும், அதனைவிட, விடா முயற்சியே அவசியம்'' என்கிறார். இக்கருத்தானது, ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகளவில் காணப்படுவதில் தனிப்பட்ட முயற்சிகள் காரணமாயுள்ளதனை அடையாளப்படுத்துகின்றன.

இலங்கையில் வரலாற்று ரீதியாக அவதானிக்கின்றபோது ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு வளர்ச்சியடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது , ஆனாலும் அவை குறிப்பிட்ட சில துறைகளில் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (சுதா, 2017). எனவே ஒப்பீட்டளவில் பார்க்கும் போது இந்த ஆய்வு பெண்களுடைய விகிதாசாரத்திற்கு ஏற்ப அவர்களுடைய பங்களிப்பு ஊடகத்துறையில் அமையாமைக்கான காரணங்களை ஆராய்கின்ற அம்சங்களை மையமாக கொண்டதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## ஆய்வுப்பிரச்சினை (Research Problem)

மேலைநாடுகளில் இலத்திரனியல் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. சில சர்வதேசிய ஊடகங்களில் பெண்கள் தயாரிப்பாளர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், நிகழ்ச்சிகளை நடாத்துபவர்கள், பணித்துறை முகாமையாளர்கள் எனப் பல தளங்களில் தமது பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர். இத்தகைய பங்களிப்புக்கள் தனிப்பட்ட வளர்ச்சிக்கும், ஊடகத்துறையின் வளர்ச்சியிலும் பாரியளவில் பங்களிப்புச் செலுத்தியுள்ளன(குளோபல் தமிழ் நியூஸ், 2018). இருப்பினும் இலங்கையில் இத்தகைய பங்களிப்புக்களை பெண்கள் செலுத்துவதில் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. பெண்கள் தொடச்சியான பாரம்பரியமான பங்களிப்புக்களைச் செலுத்தி வருகின்றனர். இத்துடன் இத்தயை துறைகளில் பெண்கள் பங்களிக்கின்ற விகிதமும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே ஏன்

இத்தகைய ஊடகத்துறைகளில் பெண்களின் பங்களிப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன? என்பது தொடர்பான ஆய்வுகள் மிகவும் குறைவாகவே அமைந்துள்ளன.

மேலும் பெண்களின் இத்தகைய பங்களிப்புக்களை மேற்கொள்வதில் ஏதாவது தடைகள் காரணமாக அமைகின்றதா? ஏன்பதனை ஆராய வேண்டிய தேவைகளும் காணப்படுகின்றன. ஏனெனில் ஊடகத்தின் சேவைகளை இன்று ஆண்களும், பெண்களும் சம அளவில் பெற்று வருகின்றனர் (குளோபல் தமிழ் நியூஸ், 2018)). இருந்தபோதிலும் இத்துறையில் பெண்களின் பங்களிப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இத்தகைய விடயத்தில் என்ன காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை அடையாளம் காண இவ்வாய்வு முனைகின்றது.

மேலும், பெண்ணிலைச் சிந்தனையின் எழுச்சி, பெண்கள் அனைத்து வகையான பொதுத் துறை சார் செயற்பாடுகளில் பங்களிப்பு செலுத்துவதற்கு உரிமைகளை வலியுறுத்துகின்றது. அதற்கான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதால் செயற்பட்டும் வருகின்றது. இருப்பினும், நடைமுறையில் இலங்கையின் இலத்திரனியல் ஊடகங்களில் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுவது ஆய்வாரள்களின் அவதானமாகும் (பெரேரா.எச். 2017). எனவே ஏன் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க விருத்தியை அடையவில்லை என்பது தொடர்பான தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன் அடிப்படையில் இலத்திரனியல் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதற்கு எவ்வாறான காரணங்கள் அமைந்துள்ளன? என்பதை ஆய்வு பிரச்சினையாகக் கருதி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கங்கள் (Research Objectives)

மேற்குறித்த ஆய்வுப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது இதன் இலக்கை அடைந்து கொள்வதற்காக ‘இலத்திரனியல் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்புக்கள் குறைவாக உள்ளமைக்கான காரணங்களைக் கண்டறிதல்’ என்கின்ற நோக்கத்தை முன்வைத்துள்ளது.

## ஆய்வு முறையியல் (Research Methodology )

இந்நோக்கத்தை அடைந்து கொள்ள இவ்வாய்வானது, பண்பு ரீதியான ஆய்வு முறையியலை பயன்படுத்தியுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்ள தமிழ் மொழியை அடிப்படையாகக்கொண்டு செயல்படுகின்ற இலத்திரனியல் ஊடகத்துறை மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இம்மாதிரியில், ஆய்வின் நோக்கம் கருதி, இலங்கை அரச இலத்திரனியல் ஊடகங்களான வசந்தம், ருபவாஹினி ஆகிய ‘ஊடகங்களில்’ பணிபுரிகின்ற 56 பெண்கள் ஆய்வுச் சனத்தொகையாக கருதப்பட்டனர். இவர்களில் இருந்து , நோக்க மாதிரியை அடிப்படையாகக் கொண்டு 30 பெண்கள் தரவுகள் சேகரிப்புக்கு

உட்படுத்தப்பட்டனர். இவ்வாய்விற்கான தரவு சேகரிக்கும் நுட்பமாக ஆழமான கலந்துரையாடல் (Indeprth- interview) பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுளுக்காக நூல்கள்இ பத்திரிகைகள்இ இணையம்இ இணையத்தளம்இ கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்டு கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது (Themetic analysis).

## தரவுப்பகுப்பாய்வு மற்றும் கண்டறிதல்களும் (Analyzing and Finding)

### ஆணாதிக்க நிலை

இவ்வாய்வில் பெண்களின் இலத்திரனியல் ஊடகப்பங்களிப்பில் பெண்களின் பங்களிப்பானது குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணங்களை ஆராய்கின்றபோது, பிரதான காரணமாக ஆணாதிக்க நிலை என்பது பிரதான பங்கை வகிப்பதனை இவ்வாய்வில் அதிகமான பதிலளிப்பவர்கள் முன்வைத்துள்ளனர். இவர்கள் மேலும் குறிப்பிடுகின்றபோது, பெண்கள் என்கின்ற காரணங்களால் குறிப்பிட்ட பாத்திரங்களுக்கு மட்டும் பெண்களைப் பயன்படுத்துகின்ற தன்மை அதிகமாயுள்ளது. பெண்களின் கல்வித்தரம், திறமை என்பவற்றை விடவும் பெண்ணின் அழகு என்பது பிரதானமாகப் பார்க்கப்படுகின்றது. இதே போல சிலர் கருத்துத் தெரிவிக்கின்ற போது, பெண்கள் பல வருட அனுபவமும் திறமையான நிகழ்ச்சிகளைத் தயாரிக்கக் கூடிய அனுபவங்களைக் கொண்டிருப்பினும், பணிப்பாளர், இயக்குனர், ஒழுங்கமைப்பாளர் ஆகிய உயர்பதவிகளில் ஆண்கள் இருப்பதனால், அவர்களின் தீர்மானங்கள் இத்துறையில் ஆதிக்கம் செலுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர். இத்தொழில்புரிகின்ற இடத்தில் நிகழ்ச்சிகளுக்காக இவ்வாறு முன்வைக்கப்படுகின்ற எழுதப்படாத விதிமுறைகள் பெண்களை குறிப்பிட்ட துறைகளுக்குள் மட்டுப்படுத்தியுள்ளதாக அடையாளப்படுத்துகின்றனர். இது பற்றி இளம் பெண் ஒருவர் குறிப்பிடும் போது,

“*நான் ஊடகத்துறையில் பட்டம் பெற்று வந்தேன். அத்துடன் மூன்று வருடங்கள் வெளிநாட்டு ஊடகம் ஒன்றில் பணியாற்றிய அனுபவுமும் உண்டு. இத்தகைய தகுதிகளை எனது தொழில் பெற்ற போது என்னுடன் தொழிலில் இணைந்து கொண்டவர்கள் பெற்றிருக்கவில்லை. இருப்பினும் இத்துறையில் பல சந்தர்ப்பங்களில் நான் ஒரு பெண் என்பதனால் எனக்கு வழங்கவேண்டிய பொறுப்புக்களை ஆண்களுக்கு வழங்கியுள்ளனர்….*”

இருந்தபோதிலும், மிகச் சொற்பமானவர்கள் அவர்களின் இடைவிடாத முயற்சியாலும், மிகக் கடுமையான உழைப்பாலும் நீண்டகாலத்தின் பின்னர் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக கடமையாற்றி வருகின்றனர். இருப்பினும் உரிய காலத்தில் தமது திறமையின் அடிப்படையில் இத்தகைய பதவி கிடைக்கவில்லை என்றும், இவற்றில் ஆண்கள் உயர் பதவிகளுக்கு தெரிவு செய்வதில், ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை காரணம் என்கின்றனர்.

இதற்குப் பொருத்தமாக இவ்வாறு செய்தி ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

*‘‘…சுமார் 09 வருடங்களின் பின்னரே எனக்கு இப்பதவி கிடைத்துள்ளது. இப்பதவிக்கு வருவதற்கு 04 சந்தர்ப்பங்கள் எனது திறமையின் அடிப்படையில் கிடைத்தன. இவ்வேளைகளில் எனக்கு இப்பதவியானது வழங்கப்படவில்லை. பெண்ணாக இருந்தமையால் தொடர்ந்தும் செய்தி வாசிப்பாளர் பணியே கிடைத்து வந்தது. இருப்பினும் எனது கடின முயற்சியும், இடைவிடாத உழைப்பும் தற்போதைய பதவியினை தவிர்க்கமுடியாமல் பெறுவதற்குக் காரணமாயுள்ளது.’’*

இலங்கையிலும் ஊடகத்துறை தொடர்ந்தும் ஆணாதிக்கத்திற்கு கட்டுப்பட்ட நிலையிலே தான் இயங்கி வருகிறது. குறிப்பாக முதன்மை பொறுப்புக்கள், பதவிகள் ஆண்களை மையப்படுத்தியே காணப்படுகின்றன. (குளோபல் தமிழ் நியூஸ், 2018). ஊடகத்துறையில் பெண்களின் பங்கு முக்கியமானது. பிரபல்யமான ஊடகங்களில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்பாளர்கள், முகாமையாளரகள், செய்தி அறிக்கையாளர்கள், தொகுப்பாளர்கள் எனப் பல்வேறு பதவிகளில் பெண்கள் தங்களின் திறமைகளைக்காட்டி வருகின்றனர். இத்தகைய பெண்களின் பங்களிப்புக்களின் பிண்னணியில் பல்வேறு சவால்களை வெற்றிகொண்டு இந்த இடத்தை அடைந்துகொண்டுள்ளமையை ஆய்வுகள் அடையாளப்படுத்துகின்றன. (கெமரிக்இ **2011 ˙ யாஸ்மின் 2015).** கடந்த 25 ஆண்டுகளில் ஊடகங்களில் பெண்களின் வகிபங்கு பாரியளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. எனினும் ஒப்பீட்டளவில் அவதானிக்கின்ற போது, ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை குறைவாகக்காணப்படுகின்றது. இவற்றில் கலாசார ரீதியாக ஆண் முன்னுரிமைப்படுத்தப்படுவது காரணமாக அமைகின்றது.(MR, 2018). ‘தலைமைத்துவம்’ எனும் போது ஆண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் சமூகம் பெண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில்லை. பெண் என்பவள் மென்மையானவள் இ கீழ்படிந்து நடக்கவேண்டியவள் என்றே எம்முடைய வாழ்க்கை முறை எமக்கு கற்றுக்கொடுக்கின்றது. அதிகாரம் எனும் போது ஆட்களை அடக்குவது என்றில்லை துறை சார் அறிவைப்பெற்று அதனை செயன்முறைப்படுத்த தெரிந்திருப்பதே. பொதுவாக ஊடகங்கள் பெண்களை பயன்படுத்துகின்றனவே தவிர பெண்கள் ஊடகங்களை பயன்படுத்துவதாய் இல்லை என பிரபல்யமான அறிப்பாளர்களின் குரல்கள் பதிவுசெய்கின்றன (விசன், 2019). ‘‘இலத்திரனியல் ஊடகங்களை பொறுத்தமட்டில் ஒரு அழகான பெண் அல்லது குரல்வளம் மிக்க பெண் தேவைப்படுகின்றாள். குறைந்த நேரத்தில் குறைந்த சம்பளத்தில் பெண்கள் அறிவிப்புத்துறையில் பயன்படுத்தப்படுகிறார்கள்’’ என்று தேவகௌரி (2010) அடையாளப்படுத்துகின்றார்.

இந்த தரவுகள் ஆரோக்கியமான தரவுகளை பதிவுசெய்தாலும் தயாரிப்பாளர்கள், பிரதம ஆசிரியர்கள், நிறைவேற்று அதிகாரிகள், பிரசுரிப்பாளர்கள் போன்ற ஊடகத்துறையின் முக்கிய பதவிகளை வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையினை விட மிக சொற்ப அளவிலே காணப்படுகின்றன. இவற்றில் ஆண்களுக்கு முன்னுரிமை வழங்குவது காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதன் அடிப்படையில் பெண்களது ஊடக பங்களிப்பு தன்னிறைவு அடையாமைக்கான காரணங்களில் ஆணாதிக்க நிலை தடையாக அமைந்துள்ளமையை ஆய்வு முன்வைக்கின்றது.

ஊடகங்கள் பெண்களுக்கு பால் நிலை சமத்துவத்தை ஏற்படுத்தாமல் இருப்பது மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலும் பெண்கள் பல தடைகளை எதிர்நோக்கின்றனர் என்பதனை கணிசமானவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனடிப்படையில் பெண்ணை ஒரு அழகுப் பொருளாகப் பார்க்கின்றமை என்பது பெண்களின் திறமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக்காட்டிலும் அவள் ஒரு 'பெண்' என்ற பாத்திரத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதனை இவ்வாய்வில் அடையாளப்படுத்த முடியும்.

மேலும் சிலரின் கருத்துப்படி, ஊடகத்துறை பெண்கள் நிகழ்ச்சிகளை கவர்ச்சியாக மாற்றுவதில் பெண்களின் அழகு முக்கியம் எனக் கருதப்படுகின்றது, என்றும், அதேவேளை ஆண்களில் அத்தகைய விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படாமல் இருப்பதும் திறமையுள்ள, அழகில் குறைந்த பெண்கள் இத்துறையில் கால் பதிப்பது தடையாக அமைவதாகவும், மற்றும் இத்துறையில் முன்னேறிச் செல்வதில் தடையாக அமைவதாகவும் குறிப்பிடகின்றனர். இருப்பினும் சிலரின் கருத்துப்படி, சில துறைசார் பொறுப்புக்களில் பெண்களின் திறமைகளுக்கு முக்கியத்துவமும் வழங்கப்படுவதனை முன்வைக்கின்றனர்.

ஆசிய நாடுகளையும் கீழைத்தேய நாடுகளையும் தவிர்த்து நோக்கினால் ஊடகம் அரசியல் பொருளாதார துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. உதாரணமாக, சுனாமி அனர்த்தத்தின் போது இலங்கை நிலவரத்தை வெளிக்கொண்டு வந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களில் அநேகமானோர் பெண்களாக இருந்துள்ளனர். இது மேலைநாடுகளின் ஊடகத்துறையில் திறமையாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற மரபும், பாகுபாடுகள் குறைந்த தன்மையும் அடிப்படையாக அமைந்துள்ளதாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்தகைய தனித்துவத்தையும் ஆளுமையையும் இலங்கையில் பெண் ஊடகவியலாளர்களும் வளர்த்துக்கொள்கின்ற போது ஊடகத்துறையில் ஆணாதிக்க நிலையை மட்டுப்படுத்துவது இலகுவானதாக அமையும் (வோல்க்.ஆர். ஸ்ரீநிவசன், 2010).

எனவே இவ்விடயத்தை ஆராய்கின்றபோது இவ்வாய்வில், இலத்திரனியல் ஊடகத் துறையில் பெண்களின் பங்களிப்புக்களும் அடைவுகளும் துறைசார் இடங்களில் நிலவுகின்ற ஆணாதிக்க தன்மைகள் ஒரு காரணியாக அமைந்துள்ளது.

**குடும்பம் சார் பொறுப்புக்கள்**

பெண்கள் ஒரு வேலையை பெற்றுக் கொண்டதும் நீண்டகாலத்திற்கு அதிலேயே தங்கிவிடுகின்ற நிலமைகள் அதிகளவில் காணப்படுகின்றன(ஊடகத்துறையில் பெண்களின் சாதனைகளும், சவால்களும், 2010). தமது தொழில் தகுதியை விட்டுவிட்டு அடுத்தடுத்த தகுதி நிலமைகளுக்கு நகர்ந்து தமது அறிவை பெருக்கிக்கொள்வதற்கான தேடலும்,

அதனை நோக்கி நகர்தலும் குறைவாக இருப்பதில் பெண்களின் குடும்பம் சார்ந்த பொறுப்புக்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன (ஹெரத்.எச்.எம்.ஏ. , 2015). குறிப்பாக குடும்பச்சுமை, நேர எல்லைகள் போன்றவற்றில் கட்டாயப்படுத்தப்பட்ட வகையில் பெண்கள் பங்காற்றுவதனால், தொழிற்துறையில் பங்களிக்கும் நேரத்தை இழக்கவேண்டி இருக்கின்றது(பெரேரா.எச். , 2017).

இவ்வாய்வில் அதிகமான பெண்கள் ஊடகத்துறையில் வேலை செய்கின்றமையால் குடும்பங்களுக்கு ஆற்றவேண்டிய வேலைகளையும் தவிர்க்கமுடியாமல் மேற்கொள்ள வேண்டியவர்களாகக் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய தவிர்க்கமுடியாத நிலமைகளால் தமது தொழிலில் மேலும் முன்னேறுவதற்கான முயற்சிகளில் அதிகம் கவனம் செலுத்த முடியாமலுள்ளதாக குறிப்பிடுகின்றனர். ஊடகத் துறையில் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்கின்ற வேலைகளை இத்தகைய பெண்கள் அதிகம் விரும்புகின்றனர். இவர்கள் இரட்டைச்சுமைகளை சுமப்பதனால் தொழிலில் தொடர்ந்தும் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதில் கடுமையான சவால்கள் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஆண்கள் எல்லா நேரத்திலும் பணியாற்ற தயாராக இருக்கின்ற போதும் பெண்கள் ஒரு குறிப்பிட்ட நேரம் மாத்திரமே தன்னுடைய பணிகளை முன்னெடுக்கிறார்கள். ஆண்கள், பெண்களை போன்று தொடர்பாடலுக்கோ, கலந்துரையாடலுக்கோ தயங்குவதில்லை. ஆனாலும் குடும்ப சார் பொறுப்புக்களை கருத்திற்கொண்டு தமது பணிகளை சரிவர முன்னெடுப்பதில் பின் நிற்கிறார்கள். திருமணம் முடித்த முடிக்காத இருசாராருக்கும் குடும்ப சார் பொறுப்புக்கள் இருப்பதை முன்வைத்திருக்கின்றனர்.

இன்னும் சிலர், இத்தகைய சுமைகள் காணப்படினும், அவர்களுக்குள் இருக்கின்ற துணிச்சல், திறமை ஆகியனவற்றைப் பயன்படுத்தி உயர் பதவிகளை அடைந்து கொள்ள முனைந்தாலும், தொடர்ந்தும் இத்தொழிலில் இருப்பதனை குடும்ப உறுப்பினர்கள் ஆதரிக்காத நிலமைகள் அடிக்கடி தொழிலில் தடைகளை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர்.

சில பெண்கள் இத்தகைய நிலமைகளுக்கு அப்பால், தொழிற் துறையினை மட்டும் தேர்ந்ந்தெடுத்து முன்னேற்றத்தை அடைந்துள்ளமையை குறிப்பிடுகின்றனர்.

இருப்பினும் சில பெண்களில் இத்தகைய குடும்ப விடயமானது அவர்கள் தொழிலைக் கைவிடுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. இது பற்றி அறிவிப்பாளர் ஒருவர் குறிப்பிடுகின்ற போது,

"*திருமணம் முடிக்க முன்பு ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் சிறந்த ஓர் அறிவிப்பாளராக கடமை புரிந்தேன். காலப்போக்கில் நான் திருமணம் செய்து கொண்டதால் எனது ஊடகத்துறையில் இருந்து விலகிவிட்டேன் காரணம் எனக்கு எனது குடும்ப பொறுப்புக்களுடன் ஊடகத்தில் பணிபுரிவதையும் ஏக காலத்தில் கைகொள்வது கடினமாக இருந்தது*".

எனவே ஒரு பெண் இரட்டை சுமைகளை ஒரே நேரத்தில் சுமப்பதானது ஊடகத்துறையில் பாதகமான முறையில் செல்வாக்குச் செலத்துகின்றது.

"ஊடகத்தில் திருமணம் முடித்த பெண்கள் இருக்கிறார்கள் என்றால் நேரடியாக அவர்கள் குடும்பத்துடனும், தொழிலுடனும் போர் செய்ய துவங்குகிறார்கள் என்று அர்த்தம் கொள்ளப்பட வேண்டும் என பாத்திமா (2019) குறிப்பிடுவது பெண்களின் தொழில் மற்றும் குடும்பம் ஆகியவற்றுக்கிடையிலான போராட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

இருந்த போதிலும், இவ்வாய்வில், தொழிலையும், குடும்பத்தின் ஆதரவுடன் தொடர்ச்சியான முயற்சிகளால் சாதனையையும் குறிப்பிடத்தக்க பெண்கள் அடைந்துள்ளனர். இவர்கள் இது பற்றிக் குறிப்பிடும்போது,

*''எனது தந்தை மற்றும் தாய் திருமணத்தின் முன்னர் இத்துறையைத் தெரிவு செய்வதில் ஆதரவாக இருந்தனர். அதே போல திருமணம் முடித்த பின்னர் கணவரின் ஆதரவு மேலும் தொழிலில் முன்னேறிச் செல்ல துணையாக அமைந்தது. செய்தி தயாரிப்பாளராக வளர்ந்ததில் குடும்பத்தின் ஆதரவு மிகவும் முக்கியமனது.''*

எனவே இரட்டை சுமைகளை கொண்டு ஒரு பெண் இலத்திரனியல் ஊடகத் துறையில் தொழிலைத் தொடர்வதிலும் உயர் இலக்கை அடைவதிலும் தடையாக அமைகின்றது.

**பெண் குறித்த சமூகப்பார்வை:**

யாஸ்மீன்.எம். (2015) குறிப்பிடுகையில், ஊடகங்களில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. இருப்பினும் ஊடகங்கள் பெண்களை வழமையான பாணியில் காட்சிப்பொருளாக அல்லது கவர்ச்சி நாயகிகளாக மரபு ரீதியான பாத்திரங்களில் தொடர்ந்தும் காட்டி வருகின்றன. அவற்றையே நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். இத்தகைய பார்வை, பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது என்கின்றார். மேலும், அனைத்து கலாசாரங்களிலும் நிலவி வரும் மரபு ரீதியான நிலைப்பாடுகள் பக்கச்சார்பான கருதுகோள்கள், ஆழமான தப்பெண்ணம் போன்றன ஊடகவியலாளர்களுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது. இருந்த போதிலும் பெண்களும் ஊடகத்துறையும் தொடர்பான கருத்துக்களில் மற்றுமொரு பார்வையும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக இன்றைய பெண்கள் தொடர்பான புரட்சிகளும், கல்வி நிலை விருத்தியும் ஆண்கள் மட்டத்தில், பெண்கள் தொடர்பான கருத்து நிலைகளில் பாரிய மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தவகையில், பெண்களின் கல்வி, சிந்தனை வீச்சுக்கள், மற்றும் அவர்களின் தொழில் ரீதியான அர்ப்பணிப்புக்கள் ஆகியன மறுபுறம் பெண்களுக்கான உரிய தளங்களை ஊடகத்துறையில் வழங்கியும் வருகின்றன (ஹெக்விச்.ஏ., 2009). இருப்பினும், இத்தகைய தொழில்கள் முழுநேரத் தொழில்களாக காணப்படுவதனால், குறிப்பாக ஷிப்ட் வேர்(க்)களாக அமைவதனால் நேரத்தை கருத்திற்கொண்டு பெண்கள் இத்தகைய தொழிற்தறைகளில் அதிக நாட்டம் செலுத்த விரும்புவதில்லை. அத்துடன் பெண்கள் மீது நிலவுகின்ற சமூகப் பார்வைகளின் செல்வாக்குகளால் பெண்கள் ஊடகத்துறைசார்ந்த தொழில்களையும், பதவிகளையும் தவிர்த்தும் வருகின்றனர்(சார்க்போட்டி,2015). எனவே மேற்குறிப்பிடுகின்ற இலக்கியங்கள்,

பெண்கள் ஊடகத்துறைசார்ந்த தொழில்களில் சமூகத்தில் காணப்படுகின்ற பண்பாட்டு நியமங்களின் செல்வாக்குகள் நேரடியான தாக்கத்தை செலுத்துகின்றது. மேலும், இத்தகைய சமூகப் பார்வைகள் இயல்பாகவே பெண்கள் இத்தகைய தொழில்களில் அதிக ஈடுபாடு காட்டுவதனைத் தடுப்பதாக அமைகின்றது எனலாம்.

இவ்வாய்விலும் பதிலளித்தவர்களில் அதிகமானவர்கள் சமூகத்தில் காணப்படுகின்ற கலாசாரச் செல்வாக்குக்கு நேரடியாக முகங்கொடுப்பதாகவும், இத்தகைய செல்வாக்குகள் தொடர்ச்சியான தொழில்களை மேற்கொள்வதில் தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக இவர்களில் சிலரின் கருத்துப்படி, தமது தொழிலில் காணப்படுகின்ற நேரத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், சிலவேளைகளில் மாலையில் நீண்டநேரம்வரை பணிபுரிய வேண்டியும் இருப்பதனால், அவர்களின் வீடுகளில் இத்தகைய தொழிலில் தொடர்ந்தும் பணிபுரிவதனை விரும்பாமல் இருப்பதாகவும், இருப்பினும் தமது விருப்பமான தொழிலை கைவிட முடியாமலுள்ளதாகவும் குறிப்பிட்டனர். இதனால் நீண்ட நேரம்வரை மேற்கொள்கின்ற வேலைகளைத் தவிர்த்து வருவதனால், இவர்களால் அதிகமான நிகழ்ச்சிகளில் பங்கேற்க முடியாமலுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

அதே வேளை இன்னும் சிலர், பல்வேறு ஆற்றல்கள் கொண்டவர்களாகத் தமது தொழிலை மேற்கொண்டு வந்தாலும், பல இடங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகளை தொகுக்கவேண்டும் என்கின்ற நிலமைகள் அடிக்கடி தமது குடும்பத்தில் விருப்பமின்மைகளை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர். திருமணமுடித்த, மற்றும் திருமணமுடிக்காத இரண்டு தரப்பினருக்கும் இவ்விடயம் பிரச்சினையாக அமைந்துள்ளது. இது பற்றி திருமணமுடித்த நிகழ்ச்சித் தொகுப்பாளர் குறிப்படும் போது,

‘‘……கடந்த மூன்று வருடமாக நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பணிபுரிகின்ற எனக்கு, இப்பணி மிகவும் விருப்பமானதாக அமைந்துள்ளது. இருப்பினும் அடிக்கடி களத்திற்குச் சென்று பணிபுரிய வேண்டி ஏற்படுகின்றமையால், பலவேளைகளில் வீட்டிற்கு தாமதமாகச் செல்ல வேண்டி ஏற்படுகின்றது. இதனால், பிள்ளைகளைப் பராமரிப்பதிலும், வீட்டு விடயங்களை பராமரிப்பதிலும் பல சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது… அதேபோல், உறவினர்களின் விஷேட நிகழ்வுகளில் கலந்தகொள்வதும் தடைப்படுகின்றது. இதனால் ஏனைய உறவினர்கள் இதனை அடிப்படையாகக் கொண்டு பல சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் அக்கறை இல்லாதவள் எனக் குறிப்பிடுகின்றனர். இதனால் சிலவேளைகளில் தொழிலைக் கை விடுட்டுவிடுவோமா எனவும் எண்ணத் தோன்றுகின்றது……’’

மேலும், திருமணம்முடிக்காத நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் குறிப்பிடுகின்றபோது,

‘‘…..பல்கலைககழகத்தில் இத்துறையினை மிகவும் விருப்பத்துடன் தெரிவுசெய்து கற்றேன். இத்துறை தொடர்பான பணிகள் எனக்கு மிகவும் விருப்பமாக இருந்தன. ஆயினும், தற்போது தொழிலை நிறுவனத்தில் மேற்கொள்ளும் போது, வேலை காரணமாக ஏற்படுகின்ற தாமதங்கள், ஏனைய ஆண் தொழிலாளர்களோடு இணைந்து பணிபுரிகின்ற நிலமைகளால் எனக்கு திருமணம் புரிவது கடினமாக அமைந்துவிடும் என எனது உறவினர்களின்

கருத்துக்கள் பெற்றோரைச் சங்கடப்படுத்துகின்றன. நான் இதனால் பல சந்தர்ப்பங்களில் சங்கடத்திற்குள்ளாகின்றேன். எனக்கு மேலும் உயர்ந்த நிலைக்குச் செல்வதற்கான சந்தர்ப்பம் இத்தொழிலில் இருக்கின்ற போதும், என்னால் அதனை ஏற்றுக் கொள்ளமுடிந்துள்ளது…..''

எனவே மேற்குறித்த கருத்தானது, ஊடகத்துறையில் பணிபுரிகின்ற பெண்களுக்கு ஊடகத்துறைசார்ந்த பணிகளை மேற்கொள்வதில், குடும்ப, உறவினர்களின் சமூகம் சார்ந்துள்ள மரபுரீதியான பார்வைகள் தடைகளையும், அழுத்தங்களையும் வழங்கி தொழில்ரீதியான பணிகளில் பாதிப்பை ஏற்படுத்துவதனை அடையாளப்படுத்துகின்றது.

ஊடகத்துறையில் எல்லோருக்கும் சமமாகத்தான் பொறுப்புக்கள் தற்காலத்தில் வழங்கப்படுகின்றன. ஆனால் ஒரு சில பொறுப்புக்களை பெண்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வெகு தூரங்களுக்கு தனியாகச்சென்று தங்குவதற்கு எல்லாப் பெண்களும் துணிந்து முன்வருவது குறைவு என்பதனை நாதன் (2010)சுட்டிக்காட்டுகின்றார்.

இருந்தபோதிலும், சில பெண்கள் சமூகத் தடைகளைப் பற்றிக் கவனத்தில் கொள்ளாது, தமது பணிகளை முன்னெடுக்கின்றவர்களாகவும் இருக்கின்றனர். இதனால் இவர்களின் பணிகளில் சிறப்பாக செயலாற்ற முடிகின்றது. இது பற்றி செய்தித் தொகுப்பாளர் குறிப்பிடுகின்றபோது,

''…….இந்தப்பணியானது மிகவும் சவாலானது, பணி இடத்திலும் சரி, குடும்பம் மற்றும் உறவினர்களிடத்திலும் சரி பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளேன். இப்படி சமூகத்தின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதனால் எனக்கு எனது பணிகளைச் செய்யமுடியாது. இவைகளைத் தாண்டி எனது இலக்கை அடைந்துள்ளேன்………''

எனவே பெண்மை குறித்த சமூக பார்வை ஒருபுறமிருக்க பெண்கள் தமக்கு கிடைக்கும் வாய்ப்புக்களையும் தவறவிடுகின்றார்கள். தமக்கான வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்துவார்கள் எனின் பெண்மை குறித்த சமூகப்பார்வையை இயல்பாகவே இல்லாதொழிக்கலாம் என்பதே எமது ஆய்வின் முன்மொழிவு ஆகும்.

## முடிவுரை (Conclusion)

ஊடகத்துறையில் பெண்கள் குறித்த இந்த ஆய்வில், பெரும்பாலான பெண்கள் அறிவாற்றல், செயலாற்றல் மிக்கவர்களாகத் தமது தொழிலில் காணப்பட்டாலும், அவர்களால் தமது பணிகளில் நிலைத்து இருப்பதிலும், பணிகளில் உயர்பதவிகளை அடைவதிலும் பணி விடயங்களில் காணப்படுகின்ற ஆணாதிக்க நிலை ஒரு தடைக்காரணியாக அமைந்துள்ளது. இங்கு பெண்கள் ஆண்களின் கீழ் பணி புரியவேண்டும் என்கின்ற மரபுசார் கருத்துக்கள் காணப்படுகின்றமை, ஆண்களுக்கு முதல் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றமை ஆகியன பெண்களுக்கு திறமைகள் இருந்தும் பணியில் ஏனைய துறைகளில் மிளிர்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதேபோல், பெண்களுக்கு காணப்படுகின்ற இரட்டைச்சுமை அதாவது குடும்பம், மற்றம் பணி சார் பொறுப்புக்கள் அவர்களுக்கு பணிகளில் மாத்திரம் சிறப்பான கவனம் செலுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது. அத்துடன் சமூகம் சார்ந்த பார்வைகள் அவர்களின் தொழிலில் தடைகளைத்தாண்டி ஏனைய உயர்பதவிகளை வகிப்பதில் பாதகமான செல்வாக்கைச் செலுத்துகின்றன. இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க

சில பெண்கள் இத்தகைய தடைகளைத் தாண்டி பல வகையான பணிகளில் உயர் அடைவுகளை அடைந்தும் உள்ளனர். எனவே இலத்திரனியல் ஊடகத்துறைகளில் பெண்கள் அதிக பங்களிப்பு செய்யாமைக்கான காரணிகளாக ஆணாதிக்கம், பெண்கள் மீதான சமூகப்பார்வை, குடும்பம்சார் காரணிகள் பிரதான செல்வாக்குச் செலுத்துவதனை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. எனவே இலங்கையில் ஊடகத்துறையில் பெண்களின் வகிபானமானது எதிர்காலத்தில் தன்னிறைவை அடைவதற்கு இத்தகைய காரணிகளின் செல்வாக்கை குறைப்பதற்கான அல்லது தடுப்பதற்கான கொள்கைகளை, திட்டங்களையும் எதிர்காலத்தில் வகிக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.

## உசாத்துணைகள் (Refernces)


Hegewisch, A. (2009), Flexible working policies: a comparative review, Institute for Women's Policy Research, Equality and Human Rights Commission, Vol. 16

Herath.H.M.A. Place of Women in Sri Lankan Society: Measures for Their Empowerment for *Development and Good Governance*, University of Sri Jayewardenepura, Sri Lanka. 2015, Vol. 01(1) 01-14

JoyaChakraborty, Hazarika,M., ArunimaGoswami (2015), Engendering media participation: the case of women journalists in assam , Global Media Journal – Indian Edition Sponsored by the University of Calcutta/www.caluniv.ac.in ISSN 2249 – 5835 Summer& Winter Joint Issue/June- December 2015/Vol. 6/No. 1& 2 .

**Kamerick, M.** "Women Should Represent Women in Media." *TEDxABQ*. (2011). TED Talk on the representation of women as victims; and victim blaming culture in media. Retrived from

https://www.ted.com/talks/megan_kamerick_women_should_represent_women_in_media/transcript?language=en

**Lang, N.** "AfterEllen and the Digital Media Bust: Queer Spaces for Women are Disappearing, Even on the Internet." *Salon.* (2016). Suggests that the lower buying power of queer women is influencing the reduction of media platforms dedicated to queer women's issues and lived experiences. Retrived from

http://www.salon.com/2016/09/21/afterellen-and-the-digital-media-bust-queer-spaces-for-women-are-disappearing-even-on-the-internet/

Perera.H. Opatha H.H.D.N.P. Work-Family Balance Of Accounting Professionals in Sri Lanka, *Women and Work* .2017.Vol.2

**Sandberg, S.** "So We Leaned In… Now What?" *TED Talks.* (2014). Sheryl Sandberg, Chief Operating Office of Facebook, discusses the reactions to "Lean In" and the ways in which women continue to struggle with success. Retrived from

https://www.youtube.com/watch?v=YraU52j3y8s

Valk.R. Srinivasan., V, (2010). Work–family balance of Indian women software professionals: A qualitative study. Retrived from

https://doi.org/10.1016/j.iimb.2010.10.010Get rights and content

**Women's Media Center.** "Status of Women in the U.S. Media." (2015). Features research on the gender gap in broadcast news, internet, print journalism and wire services. Retrived from

http://www.womensmediacenter.com/pages/2015-statistics

**Yasmin, M., Sohail, A. & Mangrio, R. A.** Myths Broken or Sustained: Representation of Women Victims in Pakistani Media. *Open Journal of Social Sciences* 2015. 3(7), 209 – 219. Retrived from

http://www.scirp.org/journal/PaperInformation.aspx?paperID=57967

ஊடக நோக்கு, இதழ் 06, மாற்றுக் கொள்கைக்கான நிலையம் - ஊடகப்பிரிவு, பக்கம் 14

ஊடகங்களில் பெண்களின் வகிபாகம் Received (2018/05/08) http://global Tamil news.net

ஊடகத்துறையில் பெண்களின் சாதனைகளும் சவால்களும் Received (2010/03/08) http://bella.dalima.blogspot.com

ஊடகம் மற்றும் ஊடகத்துறை என்பவற்றின் பால்நிலை சமத்துவத்திற்காக சாசனம் (2006)

சுகந்தினி.ஆர். (2011) பெண்களின் கண்ணோட்டத்தை ஊடகங்கள் வெளிப்படுத்த வேண்டும். தமிழ் மிரர், (செப்டம்பர்.09) Retrieved from website…… (http//tamil mirror.lk)

பஹாத்.எம்., (2016) இலங்கை முஸ்லிம்களால் உணரப்படாத ஊடகத்தின் முக்கியத்துவத்துவம். jaffna muslim.

பிசின் கன்னங்கரா (2006) ஊடக அவதானிப்புக்கள், மாற்றுக் கொள்கைக்கான நிலையம், ஊடக நோக்கு இதழ் 06.

ஜாக்குலின் பாக்.மாதர்கள் - பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களின் அந்தஸ்து, மாற்றுக் கொள்கைக்கான நிலையம், ஊடக நோக்கு, (2006) இதழ் - 06.

பாஸித்.ஏ.நியாஸ், ஒலிபரப்புச்சேவை, கெப்பிடல் சேவை, இலங்கை (2020:11:06)

முஹம்மத் ரோஷான்.எம்., ஒலிபரப்புச்சேவை, கெப்பிடல் சேவை, இலங்கை (2020:11:06)